**தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 மே 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிதலை பெற்றுக்கொண்டேன்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் III இன் கீழ் வரும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அறிக்கையிடப்படாத ரூபா 1,732,073 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 2021 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்டிருந்தன. | 2021 பெப்ரவரி 28 இற்கு முன்னர் கிடைத்த உறுதிச் சீட்டுகளில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் மாத்திரம் 2020 நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாத தீர்வு செய்யப்படாத உறுதிச் சீட்டுக்களில் அத்தியவசியமாக கொடுப்பனவு செய்ய வேண்டிய எனினும் தாமதமாக கிடைத்த உறுதிச் சீட்டுகளுக்கான கொடுப்பனவேயாகும் | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.2 வங்கி கணக்கணக்க கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நி.பி 396 இற்கு முரணாக ஒரு வங்கிக் கணக்கிற்கு உரிய 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மதங்களுக்கு மேற்பட்ட காலமாக காசாக்கப்படாத ரூபா 24,650 பெறுமதி யான 7 காசோலைகள் காணப்பட்டதுடன் இனங் காணப்படாத பெறுவனவு ரூபா 29,402 ஆகவும் இனங்காணப்படாத கொடுப்பனவுகள் ரூபா 24,328,011 ஆக காணப்பட்டது. | ரூபா 11,000 பெறுமதியான காசோலை பெப்ரவரி மாதம் தீர்வு செய்யப்பட்டிருந்தது. ரூபா 400 பெறுமதியான காசோலையொன்று காணாமல் போயிருந்தமையால் காப்பு பொறுப்பொன்றை பெற்று ஈடுசெய் காசோலையொன்று வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எஞ்சிய காசோலைகளை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக உரிய தரப்பினரிடம் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. இனங்காணப்படாத வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட வைப்புத் தொகை தொடர்பாக விரைவில் இனங்காணப்பட்டு காசேட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியதருகின்றேன். இந்த இனங்காணப்பாத கொடுப்பனவு 2020 பெப்ரவரி மாதம் வங்கி தவறுதலாக எமது கணக்கிற்கு வரவு வைத்திருந்தது. இதனை சரி செய்யுமாறு 2020.03.22, 2020.06.29 மற்றும் 202.12.16 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை | காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இனங்காணப்பட்ட வரவு மற்றும் செலவு தாமதமின்றி தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் எதிர் காலத்தில் மேலும் ஆராய்ந்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறியதருகின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வங்கிக் கணக்கு தொடர்பான நிலைபர அறிக்கையின் குறிப்பு – (VIII) இன் கீழ் 2020 திசெம்பர் மாதம் 31 இல் உள்ளவாறு வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 155,364 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 25,826 ஆக இருந்து. மேலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மற்றும் வருமானத்திற்கு எடுக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 36,050 தொகையான 09 காசோலைகளும் அதில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | இது தவறுதலாக இடம்பெற்ற தவறொன்றாக குறிப்பிடப்படுவதுடன் சரியான மீதி ரூபா 25,826 என தயவுடன் அறிய தருகின்றேன் | வங்கிக் கூற்றின் பிரகாரம் சரியான மீதி குறிப்பிடப்பட வேண்டும். |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு, அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொண்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயலாற்றல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூக அடிப்படையிலான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களுக்கான சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு (CBR) பிரிவினால் தயாரிக்கப்பட்ட நிதி முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்களால் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பிரதேச செயலகங்களுக்குரிய ஒவ்வொரு மாவட்டத்தினதும் நிதி முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளுன் ஒப்பிடும் போது 13 பிரதேச செயலகங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு மற்றம் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. | 2020 ஆம் ஆண்டின் போது பாதீட்டு மதிப்பீடுகள் காலாண்டு ரீதியில் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி, காலாண்டில் பெறப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி, 25 மாவட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு ரூபா 10,503,261.00 ஆகும் எவ்வாறாயினும், மொத்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடாக 2020 ஆம் ஆண்டில் 216-02-03-5-2509 செலவின விடயத்திற்கு ரூபா 9,590,000 மட்டுமே வழங்கப்பட்டது.<br>எனவே, காலாண்டு ஒதுக்கீடுகளில் இருந்து செலவினம் அல்லாத | செலவின அறிக்கைகள் இலத்திரனியல் முறைமைகள் பயன்படுத்தப்பட்டு அல்லது உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு சரியான செயன் முன்னேற்ற அறிக்கைகளை உரிய காலத்தில் தயாரித்தல் |

| | |
|---|---|
| அத்துடன் 08 மாவட்ட அலுவலகங்களினால் செயன் முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் 04 அலுவலகங்களினால் அறிக்கையிடப்பட்டிருந்த செயன் முன்னேற்றம் பூரணமாக இருக்கவில்லை. அவ்வாறே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 228,790 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | ஒதுக்கீடுகள் நீக்கப்பட்டன. எனவே, முதல் காலாண்டில் மொத்த செலவினம் ஒதுக்கீடாகக் கருதப்பட்டு, மொத்த ஒதுக்கீடு கடைசி ஒதுக்கீட்டைக் கொண்டு தீர்மானிக்கப்பட்டதால், எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை அல்லது செலவினம் மதிப்பீட்டை மீறவில்லை. மாவட்டச் செயலகங்களால் அனுப்பப்பட்ட செயன் முன்னேற்ற அறிக்கைகளில் குறைபாடுகள் காணப்படுவதாக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், குறைபாடுகளை தீர்வுசெய்து உரிய செயன்முன்னேற்ற அறிக்கையை வழங்குமாறு மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 757(2)(அ) பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் புத்தகங்களின் பிரகாரம் மீதி மற்றும் பௌதீக மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் ஏதேனும் காணப்பட்டால் பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்தோ அல்லது அதிகாரியிடமிருந்தோ அவை பற்றிய விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும். முறைகேடுகள் அல்லது பற்றாக்குறை மற்றும் காணாமல் போதல் | கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக, களஞ்சிய கணக்கெடுப்பு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கை பூர்த்தி செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பில் உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டு, கணக்கெடுப்பு அறிக்கைகளின் மூலம் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிட்ட மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பில் நிதிப் பிரமாணம் 757(2)(அ)பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏதுமிருந்தால் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அவை தொடர்பாக செயற்பட வேண்டும். மிகையாயின் அது பற்றி ஆராய்ந்து மீண்டும் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை பரீட்சித்த போது 423 மிகைகளும் 568 பற்றாக்குறைகளும் அவதானிக்கப்பட்ட போதும் அவை தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| (ஆ) | தலைமை அலுவலகத்தினால் நிதி ஏற்பாடுகளை விடுவித்துக்கொள்ளல் மூலம் மாவட்ட செயலகங்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்களின் கூட்டுத்தொகை சரியான இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் மூலதனச் சொத்துக்கள் கையேற்றலுக்கு இடையே ரூபா 80,060 ஆன வேறுபாடொன்ற அவதானிக்கப்பட்டது | நடைமுறையல்லாத சொத்துக்கள் கொள்வனவு தலைமை அலுவலகம் மற்றும் நிதிஏற்பாடு விடுவித்தல் என்பன மாவட்ட செயலகங்கள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டு இனங் காணப்படாத பெறுமதி யொன்றாக இவ்வாறு ரூபா 80,080 குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வேறுபாடு இனங்காணப்பட்டு எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | ஆண்டின் இறுதியில் திணைக்களத்திற்குரிய அனைத்து சொத்துக்கள் தொடர்பாக சரியான தகவல்கள் வழங்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**4.** **மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்தில் பதவியொன்றான உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவி 2016 யூன் 14 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | இவ்வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளருக்கு சமூக சேவைகள் பணிப்பாளரினால் 2018.11.23 ஆந் திகதி முதல் 2020.12.28 வரையான காலப்பகுதியில் 5 கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மூன்றாம் நிலை பதவியொன்றான நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன் இதற்காக 2019 சனவரி 30 ஆந் திகதி மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் பதில் கடமை புரிவதற்கு / கடமை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். | இவ்வெற்றிடங்களை நிரப்புமாறு கோரி ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2019.12.13, 2020.09.04. மற்றும் 20.01.2020 ஆந் திகதிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிர்வாக உத்தியோகத்தர் வெற்றிடத்தை நிரப்பும் வரை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் சமூக சேவைகள் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமை புரிகின்றார். | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 27 சமூக சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன. | 2017.01.20 ஆந் திகதிய DMS/ 1117/VI ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம், 480 சமூக சேவை உத்தியோகத்தர்களின் பதவிகள் அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் அப்போதைய சமூக அபிவிருத்தி உதவியாளர் பதவி வகிப்போரை சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் வரை மற்றும் வகிப்பதற்கு ரீதியில் வரும் வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 184 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் ஒழிக்கப்படும் வரை சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்பக்கூடாதென அறிவிக்கப்பட்டிருந்தது, சமூக சேவைகள் திணைக்களத்தின் | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதவியணியின் மீளாய்வு தொடர்பாக 2021.04.20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலிலும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுஅதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பதிலுடன் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஈ) | இரண்டாம் நிலையில் 154 பதவகள் அங்கீகரிக்கப்பட்டு காணப்பட்ட போதும் அதில் 48 பதவிகள் அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 31 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டன. அதற்கு இடையே தொழில்துறை மதியுரையாளர் (ஒப்பந்தம்) 09 பதவிகளில் 06 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆரம்ப சேவை தர பதவிகளுக்காக தேவையான ஊழியர் பல் பணி அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்தின் மூலம் வழங்குவற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதால் இப்பதவி வெற்றிடங்களை நிரப்புமாறு பல் பணி அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு உரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |